FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 173 BNSS)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301612

1. District : திண்டுக்கல் PS: V4 Se Year: 2026 FIR No.: 14/26 Date: 02.09.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended by the Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 28.08.26 at 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 01.09.26 at 11.30 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 02.09.26 Time : 07.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 02.09.26 Time : 08.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 120 KM தென்மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : உளராட்சி அலுவலகம், ஆம்பாறை
முறைக் காவல் எண் முகவரி கிராமம், கொடைக்கானல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. [illegible] (b) Father's/ Husband's Name : ஆம்பணையாண்டி (கோட்)
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 36/26 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : கூலி வேலை (g) Address : பழைய சர்வே எண் 5/43, புதிய சர்வே எண் 9/46, பாற
தொழில் முகவரி [illegible] ஆம்பாறை கிராமம், கொடைக்கானல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. முருகேசன், செயலாளர், உளராட்சி அலுவலகம், ஆம்பாறை கிராமம், கொடைக்கானல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தக்வல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்படுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

02/09/26

02/09/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

02.09.26 at 09.35hrs

Name: பெயர் [illegible]
Rank: நிலை ..... No. எண் .....

காவல் ஆய்வாளர்,
உளு.நி.க. மாவ,
நீலகிரிஸ்

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:14/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 02.09.2026-ம் தேதி 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் தாலுகா, பூம்பாறை கிராமம், புதிய கதவு எண். 9/46, பழைய கதவு எண்.5/43, பாரதியார் தெருவைச் சேர்ந்த திரு. பூம்பறையாண்டி(லேட்) மகன் P.ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்த புகாரை பெற்று 02.09.2026-ம் தேதி காலை 08.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P.ராஜா, த/பெ.பூம்பரையாண்டி(லேட்), பழைய கதவு எண்.5/43, புதிய கதவு எண். 9/46, பாரதியார் தெரு, பூம்பாறை கிராமம், கொடைக்கானல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். பெறுநர் உயர்திரு. DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேற்சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அப்பா பெயர் திரு.பூம்பரையாண்டி, எனது அம்மா பெயர் திருமதி. ஜெயம்மாள் ஆகும். எனக்கு ராஜம்மாள் மற்றும் ரோஜா என்ற இரண்டு சகோதரிகள் உள்ளனர். அவர்கள் இருவரும் திருமணமாகி தனியாக வசித்து வருகின்றனர். எனது அப்பாவிற்கு சொந்தமாக பூம்பாறை, பாரதியார் தெருவில் சுமார் 160 சதுரஅடி அளவில் மூங்கிலால் வேயப்பட்ட ஓட்டு வீடு உள்ளது. எனது அப்பா திரு.பூம்பரையாண்டி கடந்த 27.06.2018 ம் தேதியும், எனது அம்மா ஜெயம்மாள் கடந்த 05.01.2025 ம் தேதியும் இறந்துவிட்டார்கள். எனது அப்பா உயிருடன் இருந்த போது எங்கள் வீட்டிற்கான சொத்துவரியை பூம்பாறை ஊராட்சியில் அவர் பெயரில் செலுத்தி வந்தார். அவருடைய இறப்பிற்கு பிறகு அவருடைய பெயரிலான சொத்துவரியை எனது பெயருக்கு மாற்றித்தருமாறு பூம்பாறை பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகேசன் அவர்களை கடந்த 28.08.2026ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு அலுவலகத்தில் சந்தித்து விண்ணப்பம் கொடுத்தேன். அந்த விண்ணப்பத்துடன் எனது அப்பாவின்

இறப்புசான்றிதழ், வாரிசு சான்றிதழ், என்னுடைய ஆதார் கார்டு மற்றும் எங்களது வீட்டிற்கான சொத்து வரி ரசீது ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அப்போது பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகேசன் என்னிடம் பணம் ரூ.10,000/–ம் செலவாகும் என்று சொன்னார். நான் அந்த பணம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா எனக் கேட்டேன். அதற்கு அவர் சொத்துவரி ரசீது பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வதற்கு எனக்கு ஆகும் செலவு என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் நான் கேட்ட பணத்தினை கொடுத்தால்தான் பெயர் மாற்றம் செய்ய முடியும் என்று கூறினார். மேலும் விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை அங்கு அலுவலகத்தில் இருந்த திரு.சுரேஷ் என்பவரிடம் கொடுக்குமாறு சொன்னார். நானும் விண்ணப்பத்தினை அவரிடம் கொடுத்தேன். அதன்பிறகு நான் பணம் ரெடி பண்ணிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். அன்றைய தினம் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிலிருந்து கொடுக்கப்பட்ட விளம்பரத்தினை பார்த்தேன். அதில் லஞ்சத்திற்கு எதிராக புகார் அளிக்க வாட்ஸ் அப் எண். 9498180936 என்ற எண் கொடுக்கப்பட்டிருந்தது. நான் உடனே அந்த எண்ணிற்கு எனது செல்போன் எண். 9943069303லிருந்து வாட்ஸ்அப் மூலம் மேற்படி லஞ்சம் கேட்ட விபரத்தினை வாட்ஸ்அப் குறுஞ்செய்தி மூலம் புகாராக அனுப்பினேன். இந்நிலையில் மாலை சுமார் 5.34 மணிக்கு 8667064028 என்ற செல்போன் எண்ணிலிருந்து அழைத்து பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து சுரேஷ் என்பவர் பேசுவதாக தெரிவித்து, பஞ்சாயத்து செயலாளர் கேட்ட பணம் ரெடி பண்ணிவிட்டாயா, ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் இன்னும் பணம் ரெடி பண்ணவில்லை என்று கூறினேன். அதன் பின்பு சிறிது நேரத்தில் திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறையினர் என்னை அலைபேசியில் தொடர்பு கொண்டபோது மேற்கண்ட விபரங்களை தெரிவித்தேன். இது சம்மந்தமாக புகார் அளித்தால் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் லஞ்சமாக பணம் எதுவும் கொடுக்க வேண்டாம் என்றும் கூறினார்கள். அதனால் திரு.சுரேஷ் என்பவர் 29.08.2026ம் தேதி மதியம் சுமார் 2.20 மணிக்கு

செல்போனில் அழைத்த போது நான் அவரது அழைப்பினை எடுக்கவில்லை. சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை எங்களது ஊரில் தில்லை ஈஸ்வரி அம்மன் கோவில் திருவிழா என்பதால் அது முடிந்த பிறகு மீண்டும் பஞ்சாயத்து செயலாளரை சந்தித்து கேட்கலாம் என நினைத்து நேற்று 01.09.2026 ம் தேதி காலை சுமார் 11.30 மணிவாக்கில் பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகேசன் அவர்களை சந்தித்து சொத்துவரி பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.10,000/–ம் கொண்டுவந்துள்ளீர்களா என்று கேட்டார். அப்போது அவருடன் திரு.சண்முகம் என்பவர் உடன் இருந்தார். நான் பணம் கொண்டுவரவில்லை என்று கூறினேன். மேலும் கூலி வேலை செய்வதால், மிகவும் கஷ்டப்படுகிறேன் என்றும், கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறும் கூறினேன். அதற்கு அவர் ரூ.5,000/–ம் குறைத்துக் கொண்டு ரூ.5,000/–ம் கொடு என்று கூறினார். தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் தற்போது கையில் வைத்திருப்பதை கொடுக்குமாறு வற்புறுத்தினார். அதற்கு நான் எனது குழந்தைக்கு பால் பவுடர் வாங்க ரூ.1,000/– வைத்துள்ளதாக தெரிவித்தேன். அந்த பணத்தை கொடுங்கள் மீதியை நாளைக்கு கொடுங்கள் என்று கூறினார். நானும் வேறு வழியில்லாமல் பணம் ரூ.1000/–த்தை கொடுக்கும் போது அந்த பணத்தை அங்கிருந்த திரு.சண்முகம் அவர்களிடம் கொடுக்குமாறு கூறினார். நானும் அவர் சொன்னவாறே திரு.சண்முகத்திடம் பணம் ரூ.1,000/–த்தை கொடுத்துவிட்டேன். அதன் பின்பு பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகேசன் அவர்கள் என்னிடம் மீதிப்பணம் ரூ.4,000/–த்தை நாளை 02.09.2026 அலுவலகத்தில் வந்து கொடுக்குமாறு கூறினார். மேலும் தேவைப்பட்டால் எனது பெயரில் சொத்துவரி மாற்றம் செய்வதற்கு எனது இரண்டு சகோதரிகளுக்கும் ஆட்சேபணை இல்லை என்று கடிதம் வாங்கி வரவேண்டும் என்று தெரிவித்தார். நான் வீட்டிற்கு வந்து யோசனை செய்ததில் எனது பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு பஞ்சாயத்து செயலாளருக்கு லஞ்சம் கொடுத்து வாங்குவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.5,000/–ம் லஞ்சமாக கேட்டும், ரூ.1,000/–த்தை லஞ்சமாக பெற்றுக்கொண்டும், மேலும் ரூ.4,000/–ம் லஞ்சமாக கேட்ட பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகேசன்

அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் எனது பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்காக பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகேசன் அவர்களிடம் அப்பாவின் இறப்புசான்றிதழ், வாரிசு சான்றிதழ் மற்றும் வீட்டு வரி ரசீது எண். 2025-2026/22/14/10/1/1228, நாள்.14.10.2025 ஆகியவற்றின் நகலினை இணைத்துள்ளேன். மேலும் பஞ்சாயத்து செயலாளர் திரு.முருகேசன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4,000/-ம் கொண்டு வந்துள்ளேன். அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/- xxxxx (P.Raja, 02.09.2026)

-Sir, Received the complaint on 02.09.2026 at 07.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.14/2026, u/s. 7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018, on 02.09.2026 at 08.00 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 02.09.2026).

Original FIR along with computer typed complaint of Tr.P.Raja, S/o.Tr.Poombaraiyandi (late), Old Door No.5/43, New Door No.9/46, Bharathiyar Street, Poombarai Village, Kodaikanal Taluk, Dindigul District along with the relevant documents are submitted to the Hon'ble Principal District Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

02/09/26

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC,
Dindigul.